# திருமலைத்தீபம்
## Thirumalaitheepam

தீபம் – 90 மார்கழி – 2024 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=



## ஆயரின் செய்தி

**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

ஆண்டவர் இயேசுவில் இனிய வாழ்த்துக்கள்! புதிய திருவழிபாட்டு ஆண்டினுள் நாம் நுழைந்துள்ளோம். இதில் முதலாவதாக அமையும் திருவருகைக் காலம் ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காக எம்மை ஆயத்தம் செய்ய அழைப்பு விடுக்கின்றது. இக்காலத்தில் நாம் இறுதிக்காலம் பற்றி பல விடயங்களை அறிந்துகொள்கிறோம். வழிபாடுகள், மறையுரைகள், திருவருகைக்கால விசேட ஜெப ஆராதனை என பல வழிகாட்டல்கள் இதில் அடங்குகின்றன. கிறிஸ்து பிறப்புக் காலம் 24ம் திகதி தொடங்கி ஜனவரி மாதம் 12ம் திகதி, திருமுழுக்கு யோவானின் திருவிழாவுடன் நிறைவுக்கு வரும். இயேசுவின் மனித அவதாரம் பாவப்பட்ட உலகிற்கே பாரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.(யோவா 3: 16) இயேசுவின் வருகை இறையன்பின் வெளிப்பாடு. "இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல்; படைப்பனைத்திலும் தலைப்பேறு" (கொலோ 1: 15) இயேசுவின் பிறப்புக் காலம் வெறும் கொண்டாட்டங்களோடு மட்டும் நின்று விடாது, அவரது வருகையின் நோக்கம் இன்றும் எம்மில் நிறைவேற வேண்டும்.

இயேசுவின் வருகை இறையன்பின் வெளிப்பாடு என்றால் எமது இரக்கச் செயல்கள் அதை உறுதிசெய்ய வேண்டும். இச் செய்திகளை பரப்ப நாம் பங்கு ரீதியிலும் மறைமாவட்ட ரீதியிலும் ஒழுங்கு செய்யப்படும் ஒளிவிழாக்களைப் பயன்படுத்திக் கொள்வோம். மேலாக பாடசாலைகள், பல்கலைக்கழகம், நிறுவனங்களில்

**அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை**

## செபிப்போம் வாழ்த்துவோம்



**பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை**
**மார்கழி 09 பிறந்தநாள்**
**மார்கழி 20 குருத்துவ நிறைவு.**



**பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை**
**மார்கழி 25 பிறந்தநாள்.**





தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் – 0776771119



## வியான்னி இல்லம்

திருகோணமலை மறைமாவட்டத்தில் ஓய்வுபெற்ற குருக்களுக்கான ஓய்வு இல்லம், (வியான்னி இல்லம்) உப்புவெளி மேய்ப்புப் பணிநிலையத்தில், 08.12.2024 திகதி அதிவணக்கத்திற்குரிய ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அனைத்து அருட்பணியாளர்களும், அருட்சகோதரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









பத்திரிகை ஆசிரியரின் பேனா...



நாட்கள், மாதங்கள் என உருண்டோடி 2024 என்னும் வருடமே முடிவுக்கு வரும் வேளையில் நத்தார் பெருவிழாவை கொண்டாட ஆயத்தமாகின்றோம். 2024 என்னும் வருடம் இலங்கை மக்களுக்கு விசேட வருடம். புதிய ஜனாதிபதி, மற்றும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என புதியவர்கள் அலங்கரிக்கின்றார்கள். இலங்கை குடியரசின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவரது கட்சியான தேசியமக்கள் சக்தி அறுதிப்பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்துக் கொண்டது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட ஊழலற்ற நிர்வாகத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். இலங்கைத் திருநாட்டை மாறிமாறி ஆட்சி செய்த ஊழலுக்கு துணைபோன கட்சிகளை மக்கள் நிராகரிக்கும், அளவிற்கு மக்கள் மிகவும் தெளிவையும் விழிப்புணர்வையும் கொண்டுள்ளார்கள் என நினைக்கும் போது பெருமையாய் உள்ளது.

கடந்த 2022 ஆம் வருடம் நம் நாட்டில் இடம்பெற்ற மக்கள் போராட்டம் (அரகலிய) மக்கள் சக்தி எவ்வாறு பலம் உள்ளது என்பது கண்கூடு. உலக வரலாற்றில் பல போராட்டங்கள் வரலாற்றையே புரட்டிப்போட்டாலும், இலங்கையில் இடம்பெற்ற அரகலிய போராட்டம் உலகையே அதிரவைத்தது மாத்திரமல்லாமல் பலநாடுகளில் தற்போது இடம்பெறும் அரசியல் மாற்றங்களுக்கும், ஆட்சி மாற்றங்களுக்கும், வழிகோலியிருக்கிறது. நினைத்தாலே இனிக்கிறது.

இலங்கைநாடு முழுவதுக்கும் அநுரகுமார திசாநாயக்க என்றால்; திருமலை மண்ணுக்கு அருண் ஹேமச்சந்திரா. ஜனாதிபதி இலங்கை நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதோடு ஊழல் புரிந்தவர்களை சட்டத்திற்குமுன் நிறுத்தவேண்டும். வெளிவிவகார பிரதி அமைச்சரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான, அருண் ஹேமச்சந்திரா திருமலை மண்ணில் தொழில் வளங்களை உருவாக்கி, அபிவிருத்திகளை ஏற்படுத்த வேண்டும் என்பன எல்லோரதும் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

இப்பொழுது நாம் திருஅவை விடயங்களுக்கு வருவோம். அந்தவகையில் இயேசு என்னும் விடிவெள்ளியின் பிறப்பு விழா நம் எல்லோருக்கும் நல்லதொரு விடியலாகவே அமைய ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்வதோடு பிறக்க இருக்கும் புதிய ஆண்டான 2025 இல் எல்லோருக்கும் சுபீட்சம் நிறைந்ததாக அமைய பிரார்த்திப்போம். எதிர்வரும் ஆண்டு 2025 ஐ உலக கத்தோலிக்க திருஅவை யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தி, அதற்கான வகிபாகங்களை முன்னெடுக்க இருக்கிறது. அந்தவகையில் எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு எமது புனித மரியாள் பேராலய முன்வாயில் புனித நுழைவாயிலாக மறைமாவட்ட ஆயரினால் திறந்து வைக்கப்பட இருக்கிறது. அனைத்து நம்பிக்கையாளர்களும் தவறாது கலந்துகொள்வோம்.

மறையாசிரியர்களுக்கான ஒளி விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாடகப்போட்டி மற்றும் மறைக்கல்வி மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுப்போட்டி என்பவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு எமது நன்றிகள். இவற்றிற்கான வெற்றிக் கிண்ணங்களையும் மறையாசிரியர்களுக்கான ஒளி விழா பணப்பரிசில்களையும் தந்து ஊக்கப்படுத்திய மறைமாநில ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களுக்கு எமது கௌரவம் நிறைந்த நன்றிகள். அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

*அருட்பணி. அ.அ. றொஹான் பேனார்ட்*

திருமலைத்தீபம்
மறைக்கல்வி நடுநிலையம்
இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை
ஆசிரியர் - 026 222 1012
theepamlink@gmail.com

**ஆயரின் செய்தி தொடர்ச்சி...**

நடைபெறும் ஒளிவிழாக்களில் பிறமதத்தவரும் கலந்துகொள்ளும்போது இவர்களுக்கும் இறை செய்தியை நாம் அறிவிக்க சந்தர்ப்பமாகின்றது.

இவ்வருடம் தேசிய மட்டத்திலும், மறைமாவட்ட மட்டத்திலும், ஆணைக்குழுக்கள் நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பங்குமக்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்களைப் பயிற்றுவித்து வழிநடத்திய பங்குத் தந்தையர்களுக்கும், பொறுப்பானவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

2025ம் ஆண்டு யூபிலி ஆண்டு. ஒவ்வொரு 25 வருடமும் யூபிலி ஆண்டாக சிறப்பிப்பது திருஅவையின் வழமை. 1300ம் ஆண்டு திருத்தந்தை புனித 8ம் பொனிபஸ் திருஅவையில் யூபிலி ஆண்டைத் தொடங்கி வைத்தார். 2025 ஆம் ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். யூபிலி ஆண்டைத் தொடங்கி வைக்கும் முகமாக திருத்தந்தை உரோமையில் புனித பேதுரு பசிலிக்காவில் புனித வாயில்களை சம்பிரதாயப்பூர்வமாகத் திறந்து வைப்பார். எமது மறைமாவட்டத்தில் டிசம்பர் 29 ஆம் திகதி திருக்குடும்ப ஞாயிறன்று மாலை 5.00 மணித் திருப்பலி தொடங்குமுன் நாம் புனித மரியாள் பேராலய வாயில்களைத் திறந்து யூபிலி ஆண்டைத் தொடங்கி வைப்போம். இதற்கு அனைத்துக் குருக்களும் பங்குகளிலிருந்து பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். 2025 ஆம் ஆண்டு மக்களை ஆன்மீக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் வழிநடத்தவும் வளப்படுத்தவும் பல திட்டங்களை நாம் ஒழுங்கு செய்துள்ளோம். தனிநபராக, குடும்பமாக, பங்குச் சமூகமாக உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தரும்படி தாழ்மையோடு கேட்டுக் கொள்கின்றோம்.

மார்கழி 14ம் திகதி சனிக்கிழமை மருதமடு திருப்பதியின் பரிபாலகரான வணக்கத்துக்குரிய ஞானப்பிரகாசம் அன்டனிப்பிள்ளை அடிகள் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டார். 1981ல் மன்னார் மறைமாவட்டம் தனி மறைமாவட்டமாகப் பிரிந்ததிலிருந்து முதல் தடவையாக மண்ணின் மைந்தன், புதிய ஆயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரை நாம் திருகோணமலை மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துகின்றோம். மன்னார் மறைமாவட்டத்தை சிறப்பாக வழிநடத்தும் நல் மேய்ப்பனாக, இவருக்கு வேண்டிய ஆசீரை இறைவன் தந்து வழிநடத்த வேண்டுமென புதிய ஆயருக்காக மன்றாடுவோம்.

இக்காலம் உங்கள் அனைவருக்கும், ஆசீரும் அன்பும் நிறைந்த காலமாக அமைய வாழ்த்துகின்றேன். மகிழ்ச்சியும் பகிர்வும் நிறைந்த கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும். குழந்தை இயேசு உங்கள் உள்ளங்களையும் குடும்பங்களையும் என்றும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவில்,

திருமலை மறைமாவட்ட ஆயர்.

# இறைஇரக்கத்திருத்தலம் – திருகோணமலை





ஒன்பது நவநாட்களுடன் இறை இரக்கத் திருவிழா கூட்டுத் திருப்பலி 13.10.2024 அன்று அதிமேதகு ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

"உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுவார்" (தி.பா 34:18)


சிறுகதை



# பாலன் கூடு

இருள் சூழ்ந்து கும் இருட்டு மின்னல் இடி ஓசை காதைத் துளைக்கின்றது. மழை கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. வீட்டுக் கூரை ஒழுக்கினால் ஒழுக்கு விழும் இடங்களில் பாத்திரங்களை வைத்துக் கொண்டிருக்கிறாள் கிறிஸ்டினா.

திடும் திடும் என்று இன்னொரு இடி முழக்க சத்தத்தினால், அவளது பத்து வயது மகள் மேரி பயந்தே விட்டாள். "அம்மா இடி மின்னல் முழக்கத்தினால் பயமா இருக்கு…. அப்பா இன்னும் ஏன் வரல்ல… பயத்தினால் கேள்வி எழுப்பினாள் மேரி.



"அப்பா எப்ப வருவார் என்று யாருக்குத் தெரியும்" என சோர்வுற்ற பதிலை கூறிக் கொண்டே ஒழுக்கினால் நிரம்பிய தண்ணீரை வெளியே கொட்டிக் கொண்டிருந்தாள். கிறிஸ்டினா, கிறிஸ்டினா இந்தா மீன், கொஞ்சம் உடனே பொரி" இது அப்பாவின் குரல். அப்பா வந்திட்டார் மேரிக்கு ஒரே மகிழ்ச்சி இருந்தும் அதைக் கேட்க ஒரே பயமாகவும் இருந்தது. அப்பா செய்வாரா? செய்ய மாட்டாரா? என்ற சந்தேகம் அவளுக்கு.

"மழை வேறு கொட்டுது, அடுப்பெல்லாம் நனைஞ்சு போச்சு. மீன் வேற கொண்டு வந்து பொரிக்கச் சொன்னா என்ன செய்வது" மனைவியின் பரிதாபக்குரல். "பளார், பளார் என்று அறை கன்னத்தில் "ஏன்டி உனக்கு மீன் பொரிக்க முடியாதா? என்று கேட்டுக் கொண்டே கொண்டு வந்த அரைப்போத்தலை எடுத்து கிளாசில் ஊற்றி அதை வாயில் போட்டு "ஆக்…தூ" என்று சீறினான்.

வீட்டுக்குள்ளே வன்செயல்கள் நடைபெறுவது முதல் தடவையல்ல. இவ்வாறான பெண்களின் மனித உரிமைகள் மீறும் செயல்கள் அனேகம் நடந்துள்ளன. இதற்காகத்தான் கிறிஸ்டினா அருகில் உள்ள அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்வாள்.

"குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு" என்று சொல்வார்கள் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. "மேரி வாடி இங்க, இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை அல்லவா ஆலயத்திற்குப் போனியா" ஏதோ புண்ணியவான் மாதிரி கேட்டார் அப்பா. "ஆமா போனேன்… இன்டைக்கு நடந்த மறைக்கல்வி வகுப்பில் எங்கட பங்குத்தந்தை இம்முறை கிறிஸ்மசுக்கு "பாலன் கூடு" அமைக்கும் போட்டி ஒன்று வைக்கப் போகிறார். நானும் இப்போட்டியில் பங்குபற்றப் போகிறேன். அப்பா அதற்காக ஐநூறு ரூபாய் தேவையா இருக்கு தருவீங்களா? அப்பா என்று தன் ஆதங்கத்தை துணிந்து வெளியிட்டாள்.

"ஐநூறு ரூபாவா! அதுக்கு நான் என்ன செய்வேன்" "அப்பா நீங்க ஒவ்வொரு நாளும் குடிக்கிற காச சேர்த்தால் ஐயாயிரம் ரூபாய் சேர்த்திடலாம்" என்றாள் மகள். பளார்… பளார்… மேரியின் கன்னத்தில் அறை விழுந்தது. அம்மா என்று கத்திக் கொண்டே கீழே சரிந்தாள்.

"ஏங்க பிள்ளையை அடிக்கிறீங்க" என்று கேட்டாள் கிறிஸ்டினா. அடிக்காம என்ன செய்யிறது எனக்கே உபதேசம் செய்கின்றாள். பாலன் கூடு வைக்கப் போறாவாம்… பாலன் கூடு… அவள் தான் கெட்டித்தனமா படிக்கிறாளே வகுப்பில் அவள்தான் முதல் பிள்ளை நல்லா படிக்க வைங்க என்று வகுப்பு டீச்சர் சொன்னா? இந்த முறை பள்ளிக்கூடத்தில் நடக்கிற "ஒளிவிழா" நிகழ்வுக்கும் அவளை நடனம் ஆட எடுத்திருக்கிறாங்களாம்.

"இவள் படிச்சு பல்கலைக்கழகம் போகவா போறா? சும்மா போடி. வயது வந்ததும் யாருக்கும் கட்டிக் கொடுத்தா முடிஞ்சு". அடுத்த நாள் காலை சீனக்குடா தமிழ் வித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வுக்காக சகல ஆயத்தங்களுடன் அன்றைய பிரதம விருந்தினராக வருகை தரவிருக்கும் ஆயரின் வருகைக்காக அனைவரும் காத்திருக்கின்றனர்.

இரவு வீட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் மேரியும் தாயாரும் தாமதித்தே பாடசாலை ஒளிவிழா நிகழ்வில் பங்கெடுக்க அவசர அவசரமாக வருகின்றனர். "என்ன மேரி, இவ்வளவு தாமதித்து வருகின்றாயே" வகுப்பு டீச்சரின் கேள்விக்கணை. "மன்னிச்சிடுங்க டீச்சர் இரவு பெய்த மழையால் எல்லாம் குழப்பமாய் போச்சு" இது மேரியின் பதில் அவளது உண்மையான குழப்பத்தைக் கூற அவளுக்கு வெட்கமாய் இருந்தது. அப்பா தனக்கு அடித்ததும் தாயாருக்கும் அடித்ததும் அவள் வெளியில் கூற முடியாதவளாய் அதை அவள் தன் இதயத்தில் தாங்கிய வேதனையுடன் நடன நிகழ்ச்சியில் பங்குபற்ற ஓடிச் சென்றாள்.

விடிந்தால் நாளை கிறிஸ்மஸ் முதல் நாள் இரவு வீட்டைத் துப்பரவு செய்து அழகு படுத்துவதில் கிறிஸ்டினா ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். "பாலன்கூடு" வைப்பதற்காக மேரி முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறாள். அப்போது அங்கே அப்பா வருகின்றார் அப்பாவைக் கண்டதும் மேரிக்கு ஒரே பயமாக இருந்தது?

"பாலன் கூட்டை யாரடி வாங்கித்தந்தது" அப்பாவின் பயங்கர மிரட்டல். "யாரும் வாங்கிக் கொடுக்க இல்ல பாடசாலையில் நடந்த ஒளிவிழா நிகழ்வின் போது மேரிக்கு பரிசாகக் கிடைத்தது." இடையில் குறுக்கிட்டாள் கிறிஸ்டினா.

பரிசாகக் கிடைத்ததா? இது தந்தையின் சிந்தனை. ஆமாங்க பரிசாகத்தான் கிடைத்தது "பாலன்கூடு" போட்டியில் வெற்றி பெறவேண்டும் என்று ஒரே ஆசையாய் இருந்தாள்… இப்போதாவது அவள் எண்ணம் ஈடேறட்டும் என்று தாழ்ந்த குரலில் கூறினாள் கிறிஸ்டினா?

தந்தை மேரியை உண்ணிப்பாக பார்க்கின்றார். அவள் கண்களில் லேசாக கண்ணீர்த் துளிகள் வெளியே வந்து கொண்டிருந்தது. மேரி… என்று அழைத்தபடி கட்டித்தழுவினான் "மேரி… இன்றிலிருந்து நான் குடிக்க மாட்டேன். இது சத்தியம் என்று அவனும் அழ ஆரம்பித்தான். மூவரும் சாமப் பூசைக்குப் போக தயாரானார்கள். கிறிஸ்து இம்முறை மேரியின் வீட்டில்தான் பிறந்துள்ளார்.

ஜோ. நோமன் பல்தஸார், ஓய்வு நிலை அதிபர்

## படித்ததில் பிடித்தது



சேவியர் அந்தோனி சே.ச

# ஏமாற்றுப் புத்தி

பத்தாயிரம் ரூபாய் பணத்தோடு
பணப்பை ஒன்றை காணவில்லை.
தொலைத்துவிட்டு துவண்டு போய் நின்றான்.
பணக்காரன் ஒருவன்

போன இடமெல்லாம் போய் பார்த்தான்
கிடைக்கவில்லை.
அதிர்ச்சியில் தடுமாறியவன்
தண்டோராப் போடச் சொன்னான்:
'பணப்பையைக் கண்டெடுத்துத் தருபவருக்கு
இரண்டாயிரம் ரூபாய் பரிசு!'

ஏழை விவசாயி ஒருவர்
அதைக் கண்டெடுத்தார்.
பணக்காரனிடம் தந்துவிட்டுப்
பரிசுக்காக நின்றார்.

பணத்தைத் திரும்பப் பார்த்துவிட்ட
பணக்காரன் ஒரு எத்தன்;
அறிவித்த பரிசுப் பணத்தைத் தர மனமில்லை.
மூளையைக் கசக்கி யோசித்தான்.

பரிசை மறுத்தது மட்டுமன்றிப்
பழியை வேறு அந்த ஏழை மீது சுமத்தினான்:
'இதில் பத்தாயிரம் ரூபாய் பணத்தோடு
ஒரு வைர மோதிரமும் இருந்ததே…
அது எங்கே?'

வழக்கு மன்றத்தில் புகார் வேறு கொடுத்து விட்டான்.
வழக்கை விசாரித்தார் மரியாதை இராமர்.

குற்றம் சுமத்தப்பட்டவரின்
பரிதாப நிலையை உணர்ந்தார்.

அன்றிரவு அவரும்
மூளையைக் கசக்கி யோசித்தார்.

மறுநாளே
அதிரடித் தீர்ப்பை வழங்கிவிட்டார்:
'செல்வந்தரே!
உன்னுடைய பைக்குள்
பத்தாயிரம் ரூபாய் பணத்தோடு
வைரம் ஒன்றும் இருந்ததாகச் சொல்கிறீர்
அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.
வைரம் இருக்கும் பைதானே உன்னுடைய பை.
இது வைரம் இல்லாத பை உன்னுடையதல்ல!
இது யாருடையது என்றும் தெரியவில்லை.
அதைக் கண்டுபிடிக்கும் வரை…
விவசாயிக்கே பணப்பை சொந்தம்
எனத் தீர்ப்பளிக்கிறேன்.'

நக்கலாக முடித்தார்:
'கவலைப்படாதே…
உன் பையைத் தேடி
மீண்டும் தண்டோராப் போட்டுப் பார்.
ஒருவேளை கிடைத்தாலும் கிடைக்கும்!'

**அறிவு…**
**அநீதியையும் ஊக்குவிக்கும்;**
**நீதியையும் நிலை நாட்டும்.**




## அருட்பணி : அ. அ. நவரெத்தினம் (நவாஜி)

இயேசு கற்பித்த இறைவேண்டலின் முதலாவது விண்ணப்பமாகிய 'உமது பெயர் போற்றப்பெறுக' என்பதனுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும், பிரிக்க முடியாத உறவினைக் கொண்டதாக இரண்டாவது மற்றும் மூன்றாவது விண்ணப்பங்களாகிய 'உமது அரசு வருக,' 'உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக' என்பன அமைந்திருப்பதனை நாம் நோக்க முடியும். தந்தை இறைவனை நோக்கிய வேண்டுதலில் இயேசுகிறிஸ்து முன்வைக்கின்ற இரண்டாவது விண்ணப்பம் யாதெனில் 'உமது ஆட்சி (அரசு) வருக' என்பதாகும். இந்த சொற்றொடரினை அப்படியே நோக்குகின்றபோது 'கடவுளின் அரசானது (ஆட்சியானது) முழுமையாக இம்மண்ணுலகில் உதயமாகட்டும் என்பதனைக் குறித்து நிற்கிறது. அதனை இன்னும் ஆழ அகலப்படுத்தி நோக்குகின்றபோது உலகானது கடவுளின் விருப்பத்தோடும் அவரது ஆட்சியோடும் இணைந்து பயணித்து அதனை இம்மண்ணகத்தில் உருவாக்குகின்ற உயரிய நோக்கத்தினைக் கொண்டதாகும்.

தங்களது வாழ்வில் பல்வேறுபட்ட அடிமைத்தனங்களைச் சந்தித்த இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட மெசியாவிற்காகவும், அவரது ஆட்சிக்காகவும் காத்திருந்தார்கள். பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினர்கள் மெசியா குறித்த பல முன்னறிவிப்புக்களை முன்மொழிவதை விவிலியத்தில் காணலாம் (காண்க: எசாயா 9:6–9, மீக்கா 2:12–13). ஆயினும் வாக்களிக்கப்பட்ட மெசியாவாக இயேசுவைக் காண அவர்களுக்கு முடியாமற் போனது. இயேசுவில் கடவுளின் அரசு இம்மண்ணகத்தில் உதயமாகியது. ஆயினும் இன்னும் முழுமையடையாமல் உள்ளது. அதனை முழுமையடையச் செய்கின்ற பொறுப்பு அனைத்து நம்பிக்கையாளருக்கும் தரப்பட்ட கடமையாகும்.

இயேசு கற்பித்த இறைவேண்டலில் வெளிப்படுகின்ற 'உமது அரசு வருக' எனும் சொற்றொடர் கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி நூலில் விளக்கப்பட்டுள்ளவாறு; கடவுளின் விருப்பம் மற்றும் மனித குலத்திற்கான அவரது திட்டம் ஆகியவற்றிற்கான ஆழமான எதிர்நோக்கு மற்றும் அர்ப்பணமாக நோக்கப்படுகிறது.

**கடவுளின் ஆட்சிக்கான விருப்பம்:**
'உமது ஆட்சி வருக' என்கிற விண்ணப்பமானது, நாம் வாழும் பூமியில் கடவுளுடைய அரசு நிறைவேறுவதற்கான நமது ஏக்கத்தினை வெளிப்படுத்துகிறது. நீதி, அமைதி மற்றும் முழுமையான தெய்வீக அன்பின் நிறைவினைக் கொண்டு வருகின்ற, கடவுளின் இறையாண்மை நிறைந்த ஆட்சியானது, ஒவ்வொரு இதயத்திலும் மற்றும் படைப்பனைத்திலும் இடம்பிடிக்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறது. (காண்க: க. தி. ம. எண்: 2816). நாம் எதிர்நோக்கி நிற்கின்ற இக்கடவுளின் அரசானது நிகழ்காலமாகவும், எதிர்காலமாகவும் நோக்கப்படுகிறது. அதாவது அது ஏற்கனவே நம்மத்தியில் தொடங்கப்பட்டுவிட்டது, ஆனாலும் அது இன்னும் முழுமையாக முடிக்கப்படவில்லை, என்பதே அதன் பொருளாகும். விவிலிய வார்த்தைகளில் இதனை நோக்குகின்றபோது இயேசுவின் பணித்தொடக்கத்தின் அழைப்பானது யாதெனில் "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1:15) என்பதாகும்.

**இயேசுவின் இறையரசுப் பணியுடன் இணைதல்:**
இயேசுவின் இவ்வுலகப் பணியானது, அவரது போதனை முதல் வல்ல செயல்கள் வரை கடவுளின் அரசின் வருகையினை சுட்டிக்காட்டி நின்றது. இயேசு கற்பித்த இறைவேண்டலில் வருகின்ற 'உமது ஆட்சி வருக' என்கிற வேண்டுதலை மன்றாடுவதன் வாயிலாக இறைமக்கள் (கிறிஸ்தவர்கள்) கிறிஸ்துவின் அரசினை இவ்வுலகில் நிறைவேற்றுவதற்கான பணியில் தங்களையும் இணைத்துக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாது அப்பணியில் அவர்கள் உடன் உழைப்பாளர்கள் மற்றும் சாட்சிகள் என்கிற தங்களது பங்கினையும் ஏற்றுக் கொள்கிறார்கள் (காண்க: க.தி.ம. எண்கள்: 2817 – 2818).

**எதிர்நோக்கும் எதிர்பார்ப்பும்:**
இந்த இறைவேண்டலானது இயேசுகிறிஸ்து மாட்சியுடன் தமது இரண்டாவது வருகையில் திரும்பி வருகின்றபோது நிறைவேறவுள்ள, அவரது ஆட்சி மீதான ஆழமான எதிர்நோக்கினைத் தூண்டுகிறது. அதுமட்டுமல்லாது அதன் வருகைக்காக இறைமக்களாக தற்போது அதன் வெளிப்படுத்துதலில் பங்கேற்றவர்களாக பொறுமையுடன் முழுமையான நிறைவுக்காகக் காத்து நிற்கின்றோம். (காண்க: க. தி. ம. எண்: 2818). கடவுளின் அரசுக்காக படைப்பனைத்தும் ஆவலுடன் காத்து நிற்கிறது.

இதயங்களின் மற்றும் சமூகங்களின் மாற்றம்: கடவுளின் அரசின் வருகைக்காக நாம் வேண்டும். வேண்டுதலானது தனிப்பட்ட வாழ்விற்கான மற்றும் சமூக மாற்றத்திற்கான அர்ப்பணமாகும். கடவுளின் அரசினை இம்மண்ணகத்தில் விரும்புவதன் வாயிலாக, கடவுளின் அழைப்புக்கு பதிலளிப்பதன் ஒரு பகுதியாக, இரக்கம், தாழ்ச்சி, நீதி போன்ற விழுமியப் பண்புகளை தங்களது வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகிட கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் உறுதியளிக்கின்றோம் (காண்க: க. தி. ம. 2819).

**ஆன்மிக விழிப்புணர்வும், போரும்:**
மறைக்கல்விப் போதனையின்படி, கிறிஸ்தவர்கள் தங்களது வாழ்வில் பாவம், உலகம், மற்றும் அலகை ஆகியவற்றிடமிருந்து எதிர்ப்பினை எதிர்கொள்வதால், 'உமது அரசு வருக' என்கிற விண்ணப்பமானது ஆன்மிக விழிப்புணர்வு மற்றும் போரின் அவசியத்தை ஏற்றுக் கொள்கிறது. அந்த வகையில் இந்த இறைவேண்டலானது, கடவுளின் அரசு முழுமையாக வெளிப்படும் வரையில் நாம் நம்பிக்கை வாழ்வில் அசைவுறாது, நிலைத்திருக்க வலிமை தருகின்ற இறைவேண்டலாகத் திகழ்கிறது (க. தி. ம. எண்: 2820).

**திருஅவையுடனான ஒற்றுமை:**
இறுதியாக, 'உமது அரசு வருக' என்கிற சொற்றொடர் திரு அவைக்குள்ள கூட்டு எதிர்நோக்கினை வெளிப்படுத்துவதுடன், திரு அவையானது கடவுளின் அரசின் அடையாளமாகவும், கருவியாகவும் இருக்க அழைக்கப்படுகிறது. திரு அவையானது கடவுளின் அன்பின் உண்மையான சாட்சியாகத் திகழ வேண்டுமென்பதற்கான இறைவேண்டலாகத் திகழ்வதுடன்; அதன் நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் தெய்வீக அன்பினை பிரதிபலிக்கும். உலகினைக் கட்டியெழுப்புவதில் தீவிரமாகச் செயற்பட வேண்டுமெனவும் அழைக்கிறது (காண்க: க. தி. ம. எண்: 2821).

'உமது ஆட்சி வருக' என்பதன் மறைக்கல்வியானது நம் அனைவருக்கும் விடுக்கும் அழைப்பினை சுருக்கமாக நோக்குகின்றபோது, நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் கடவுளின் விருப்பத்துடன் தமது வாழ்வினை சீர்தூக்கிப் பார்த்து சீர்படுத்துவதுடன், அவரது அன்பால் மாற்றப்பட்ட உலகினை உருவாக்குவதற்காக, தீவிரமாக செயற்பட வேண்டுமென்பதும், அவரது அரசின் இறுதி நிறைவேற்றத்திற்கான எதிர்நோக்கில் உறுதியாக இருக்கவும் அழைப்பு விடுக்கிறது.




**அருட்பணி – கலாநிதி பிறைனர் செலர்**

திருக்குடும்பத்திற்கும் மறைக்கல்விக்கும் என்ன தொடர்பு? என்று சிந்திக்கும் போது மறைக்கல்வி என்றால் என்ன? என்ற கேள்வியும் சேர்ந்து எழுகிறது. இதற்கு எளிய பதிலாக, மறைக்கல்வி என்பது ஒருவர் விசுவசித்து ஏற்றுக்கொண்டு வாழ்வாக்க விரும்பும் மறையைப் பற்றிய அறிவை, புரிதலை, தெளிவைப் பெற்றுக்கொள்ள உதவும் கல்வி என்று கூறலாம். அப்படியென்றால் திருக்குடும்பம் விசுவசித்து ஏற்றுக்கொண்டு வாழ்வாக்கிய மறை எது?

திருக்குடும்பமாய் வாழ்ந்த யோசேப்பு, மரியா, இயேசு, "தந்தை இறைவன் ஒருவர் மட்டுமே" என விசுவசித்து ஏற்றுக்கொண்டார்கள். இந்த உலகிலே இறைவனை மட்டுமே அன்பு செய்து, நாடித் தேடினார்கள். அவரே அவர்களின் எண்ணங்களாகவும், விருப்பங்களாகவும், செயல்களாகவும், பொருளாகவும், திகழ்ந்தார்கள். 'இறைவனுக்கு மட்டுமே மாட்சி' அதன் வழியாக 'இறைத்திட்டம் நிறைவேற்றல்' என்ற ஆன்மீகத்தையே தங்களின் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தனர். அவற்றை நிறைவேற்றியவாறு ஒரு குறுகிய காலத்தை மட்டும் இந்த உலகில் செலவிட்டாலும், அவர்களின் எண்ணங்களும் உணர்வுகளும் விண்ணை நோக்கியவாறே இருந்தன.

இக்குடும்பத்தில் வளமை பொங்கவில்லை, செல்வம் செழிக்கவில்லை. ஆனால் மகிழ்ச்சியும், அமைதியும் நிறைவாய் இருந்தன. ஏனென்றால் அக்குடும்பத்தில் கடவுளின் பிரசன்னமும், கடின உழைப்பும், உயர்வான நேர்நிலை எண்ணங்களும், கடவுள் பயமும் இருந்தன.

இவ்வாறு மண்ணுலகில் இருக்கும் எல்லாருக்கும் சிறப்பாக குடும்பங்களுக்கும் இயேசு, மரியா, யோசேப்பு எனும் திருக்குடும்பம் முன்மாதிரியாக, முன்னோடியாக இருக்கின்றனர். அவர்களின் வாழ்வு இன்றைய குடும்பங்கள் திருக்குடும்பங்களாக மாற வழிகாட்டியது குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை வாழ்க்கைப் பாட மறைக்கல்வியாகத் தந்திருக்கின்றனர்.

**திருவிவிலிய ஒளியில் திருக்குடும்பம்**

**புனித யோசேப்பு**

- நேர்மையாளர்.
- மரியாவை அவரது நிலையிலேயே ஏற்றுக் கொண்டார்.
- கடின உழைப்பாளர்

திருவிவிலியத்தில் இவரைப்பற்றி அதிகமாகக் கூறப்படாவிட்டாலும் தொழிலாளர்களின் பாதுகாவலராக இருந்து இறைத்திட்டத்தை செயற்படுத்துபவராக திருஅவை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

நாம் கற்கும், கற்பிக்கும் மறைக்கல்வி வெறுமனே கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மட்டும் உள்ளடக்கியதல்ல. அது மனச்சான்றுக்குச் செவிசாய்க்கத் தூண்டுகிறது. இதயத்திலிருந்து உறவாடும் கடவுளின் குரலைக் கேட்கச் செய்கிறது. யோசேப்பு கடைப்பிடித்த நேர்மை, இறைதிட்ட ஏற்பு, கடின உழைப்பு பெண் மதிப்பு போன்ற மதிப்பீடுகள் வழியாக வெளிப்படுத்தத் துணிவதே மறைக்கல்வி கற்றலின் நோக்கம். இந்த மதிப்பீடுகளின் ஒளியில் வாழவே மறைக்கல்வி கற்கின்றோம். இவற்றைத்தான் யோசேப்பு தன் சத்தமில்லா வாழ்வால் சாதித்து சரித்திரத்தில் இடம்பிடித்தார்.

**அன்னை மரியா**

- ஆண்டவருக்கு அடிமையானவர்.
- கணவரை அன்பு செய்தவர்
- பிறர் தேவையை அறிந்து தானாக உதவும் நல் உள்ளம் கொண்டிருந்தார்.
- இறைப்பற்று மிக்கவர், சட்டங்களை மதித்தவர், அதனால் தான் மகனாம் இயேசுவை அழைத்துக் கொண்டு தம் கணவரோடு எருசலேம் கோவில் சென்றார்.

இத்தகையப் பண்புகளோடு நல்ல தாயாக, இன்ப துன்பங்களை பணிவோடு ஏற்றுக்கொள்ளும் பெண்ணாக வாழ்ந்தார். அடக்கம், அமைதி, இறையருள் பெற்றவராக இறைவார்த்தையை தன் உள்ளத்தில் ஏற்று சிந்தித்தவாறு மீட்புத் திட்டத்தில் பங்கேற்றார்.

மறைக்கல்வியின் படிநிலைகள் ஐந்து என்பர். சந்தித்தல், அறிதல், ஏற்றல், மனம்மாறுதல், அர்ப்பணித்தல். இந்த ஐந்து படிநிலைகளையும் மரியா தம் வாழ்வில் எதிர்கொண்டார். எவ்வாறெனில், வானதூதர் கபிரியேலின் சந்திப்பு, அவர் வழியாக இறைத்திட்டம் அறிந்து கொள்தல், இறைத்திட்டத்தை ஏற்பதில் எழுந்தத் தயக்கம் வானதூதரின் விளக்கத்தால் இறைத்திட்டமதை மனம் ஏற்றல், நான் ஆண்டவரின் அடிமை எனச் சொல்லித் தன்னையே அர்ப்பணித்தார். இவைகளை உணர்த்துவதுதான் மறைக்கல்வியின் பணியாகும் இப்பண்புகளைப் புரிந்துகொண்டால் நாமும் மரியாவின் மனநிலை பெறுவோம் என்பது உறுதி.

**இயேசு**

- பெற்றோருக்கு பணிந்து கீழ்ப்படிந்து வாழ்தவர்.
- அனைவருக்கும் உகந்தவராக வாழ்ந்தவர்.
- ஞானம் பெற்றவராய் இருந்தார்.
- ஏழையர்மீது அதிகக் கரிசனை கொண்டிருந்தார்.

மறைக்கல்வி என்பது சில மந்திரங்களை மனனம் செய்து ஒப்புவிக்கும் இடம் அல்ல. அது இயேசுவின் வாழ்வு, பணிகள், போதனைகள், பாடுகள் - இறப்பு - உயிர்ப்பு - விண்ணேற்பு என்ற மறையுண்மைகளை இதயத்தில் அசைபோடும் இடம். மறைக்கல்வி வகுப்பு வழியாக இவைகளைக் கற்றுக்கொள்கிறோம் என்பதைவிட அனுபவமாக்குகின்றோம். நாம் ஒவ்வொருவரும் மறு இயேசுவாக மண்ணில் உலா வர நம்மைச் செதுக்கும் உலைகளமே மறைக்கல்வி என்பதை மனம் இருத்துவோம்.

**இறைத்திட்டம் உய்த்துணர வழிகாட்டும் மறைக்கல்வி**

இவ்வாறு இயேசு, மரியா, யோசேப்பு வாழ்ந்து காட்டிய வாழ்வை, சிறப்பாக பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு மற்றும் பொறுமை போன்ற பண்புகளை நாம் மறைக்கல்வி வழியாகக் கற்று வாழ அழைக்கப் படுகின்றோம். இயேசு, மரியா, யோசேப்பு என் இடத்திலே இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்? என்ன சொல்லியிருப்பார்கள்? எப்படி செயற்பட்டிருப்பார்கள்? என்று நம் இடத்தில் அவர்களை வைத்து பார்த்து நம் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் அவர்களைப் போல் செயற்பட முயல வேண்டும்.

மேலும் திருக்குடும்பம் வெறும் இறைத்திட்டத்தில் பங்கு பெறுவதல்லாமல் மானுடத்தின் விடுதலைப் பணியில் கடவுளோடு தன்னை இணைத்துக் கொண்டது. பல்வேறு அநீதிகள் மலிந்திருந்த யூத சமுதாயத்தின் அடக்குமுறைகளுக்குப் பணியாமல் துணிச்சலுடன் இறைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஏழைகள், தேவையில் இருப்போர், ஒதுக்கப்பட்டோர், மனித மாண்பை இழந்தோருக்குத் துணையாய் இருந்தது. நீதியோடும் நேர்மையோடும் வாழ்ந்தது.

**திருக்குடும்பம் கற்றுத்தரும் மறைக்கல்வி – நம் குடும்பங்களில்**

- குடும்பத்தில் அவரவர் இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்ளுதல்
- பொது இடங்களில் புண்படுத்தாதிருத்தல்
- ஒருவர் ஒருவருக்காக தியாகம் செய்தல்
- குடும்பத்தோடு நேரத்தை செலவிடுதல்
- தினமும் குடும்பமாக இறைவேண்டல் செய்தல்
- பிள்ளைகளை இறைப்பற்றில் வளர்த்தல்
- துன்பப்படுவோருக்குச் சார்பாக இருத்தல்
- திருஅவையோடு இணைந்து பயணித்தல்

**திருத்தந்தை பிரான்சிஸ் உணர்த்தும் எளிய குடும்ப மறைக்கல்வி**

நம் திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் குடும்பம் குறித்த மறைக்கல்வி போதனையில் மூன்று முக்கிய வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை, தயவுசெய்து, நன்றி, மன்னிப்பு என்பனவாகும். தயவுசெய்து எனக்கூறி தலையிடுவதும், நன்றி சொல்லி நம் நல்உணர்வை வெளிப்படுத்துவதும், என்னை மன்னியுங்கள் என்று சொல்லி வருத்தம் தெரிவிப்பதும் மிக எளிமையான வார்த்தைகளாகத் தெரியலாம். ஆனால் அவற்றை நடைமுறையில் கொணர்வது அவ்வளவு எளிதல்ல. இதை நாம் பயன்படுத்த பழகிக்கொண்டால் நம் குடும்ப உறவுகள் மேம்படும். நம் குடும்பமே ஒரு மறைக்கல்வித் தளமாகும்.

நம்மையும் நம் குடும்பத்தையும் கடந்து சமூக நலனில் அக்கறை கொள்ளுதலே சமூக நலனாகும். நாம் ஒவ்வொருவரும் உறவின் பாலங்களாக இருக்க வேண்டும் என்று திருத்தந்தை அன்போடு அழைக்கிறார். பகையைப் பாசத்தால் வெல்லவும், எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்து நேர்நிலையான எண்ணங்களைச் சிந்திக்கும் போதும் இறைபிரசன்னத்தாலும், இறைவேண்டலாலும், அன்புறவாலும் நம் உறவுகளை வலுப்படுத்தும் போதும் நம்மையும் நம் குடும்பத்தையும் உலகத்தையும் கோயிலாக்க முடியும். அப்போது ஒவ்வொரு குடும்பமும் இன்னொரு திருக்குடும்பமாக, மூவொரு கடவுளின் இனிய சாயலைப் பிரதிபலிக்கும் குடும்பமாக இம்மண்தனில் ஒளிரும். அதற்குத்தான் மறைக்கல்வி எனும் நம்பிக்கை வளர்க்கல்வி நமக்குத் தரப்பட்டிருக்கிறது.

# திருவருகைக் கால தயாரிப்பு



இன்னுமா தயக்கம் – 34

நம் ஒவ்வொருவரையும் இறைவன் அன்பு செய்வதற்காக அவர் தன் இறைநிலையை இழந்து மனித நிலைக்கு உட்பட்டார். இந்த நிலையில் அவர் தன்னை மனித நிலைக்கு தாழ்த்தி தன் இறைநிலையை மனிதனுக்கு வழங்க முற்பட்டார். அந்த நிகழ்வையே நாம் கிறிஸ்துமஸ் விழாவாக கொண்டாடுகின்றோம்.

இந்த விழாவின் தயாரிப்பாக நான்கு வாரங்களை அனுசரிக்கின்றோம். இந்த நான்கு வாரங்களை திருவருகைக் கால தயாரிப்பாக பயன்படுத்துகின்றோம். இதில் திருவருகைக் கால மலர் வளையத்தை வைத்து அதில் ஐந்து மெழுகுதிரிகளை ஏற்றி கொண்டாடுகின்றோம். முதல் நான்கு மெழுகுதிரிகள் எதிர்நோக்கு, அமைதி, மகிழ்ச்சி மற்றும் அன்பு ஆகிய விழுமியங்களைச் சுட்டிக் காட்டுகின்றது. இவை கிறிஸ்து பிறப்பு விழாவின் தயாரிப்பாக அமைகின்றன. ஐந்தாவது மெழுகுதிரி கிறிஸ்துமஸ் விழாவன்று கிறிஸ்துவைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

ஊதா நிற இறைவாக்கினர் மெழுகுதிரி, எதிர்நோக்கு என்னும் விழுமியத்தை முதல் வாரத்தில் சுட்டி நிற்கின்றது. ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் திருஅவையை இது காட்டுகின்றது. ஊதா நிற பெத்லேகேம் மெழுகுதிரி, அமைதி என்னும் விழுமியத்தை இரண்டாம் வாரத்தில் சுட்டிக் காட்டுகின்றது. அன்னை மரியாளும் புனித யோசேப்பும் பெத்லேகேமுக்கு பயணித்த நிகழ்வை நினைத்து இறைவனின் அமைதியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த இரண்டாம் வாரம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இளஞ்சிவப்பு நிற ஆயன் மெழுகுதிரி, மகிழ்ச்சி என்னும் விழுமியத்தை மூன்றாம் வாரத்தில் சுட்டிக் காட்டுகின்றது. இது நம் ஆண்டவரின் பிறப்பை நமக்கு நினைவூட்டி நாம் மகிழ்ச்சியில் வாழ அழைக்கின்றது. ஊதா நிற வானதூதர் மெழுகுதிரி நான்காம் வாரத்தில் அன்பு என்னும் விழுமியத்தை சுட்டிக் காட்டுகின்றது. வானதூதர் அறிவித்த செய்தி இறைவனின் அன்பை நமக்கு வெளிப்படுத்துகின்றது. வெண்ணிற கிறிஸ்து மெழுகுதிரி கிறிஸ்து பிறப்பு விழாவன்று ஒளியை பிரதிநிதித்துவப்படுத்தி ஏற்றப்படுகின்றது. கிறிஸ்துவே இவ்வுலகின் ஒளி என்பதை இந்த மெழுகுதிரி உணர்த்துகின்றது.

திருஅவையில் ஊதா நிறம் மனமாற்றத்திற்கான நிறமாகும். இந்த காலத்தில் நாம் மூன்று வாரம் ஊதா நிற மெழுகுதிரியையும் ஒரு வாரம் இளஞ்சிவப்பு நிற மெழுகுதிரியையும் ஏற்றி ஜெபிக்கின்றோம். இந்த காலம் நம் மனமாற்றத்திற்கான காலமாகவும் அமைந்துள்ளது. எதிர்நோக்கு, அமைதி, மகிழ்ச்சி மற்றும் அன்பு ஆகிய விழுமியங்களைக் கற்றுத் தரும் இந்த திருவருகைக் காலம் நம் ஒவ்வொருவரது மனதிலும் ஆண்டவர் இயேசுவின் வரவை தயார் செய்வதற்கான காலமாகும். இறைவன் வந்து தங்கும் அளவிற்கு நம் மனதை சுத்தம் செய்து ஆயத்தம் செய்வோம். இவையே திருவருகைக் கால தயாரிப்பாக திருஅவை நமக்கு சுட்டிக் காட்டுகின்றது. இவற்றோடு காலம் காலமாக கிறிஸ்தவ பாரம்பரிய தயாரிப்பு இன்னும் ஆழமான விதத்தில் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கிறிஸ்துமஸ் பெருவிழா கிறிஸ்துவின் விழுமியமான அன்பு, பகிர்தல் ஆகிய குணங்களை செயற்படுத்தும் ஒரு விழாவாக அமைந்துள்ளது. ஆனந்த ராஜும் ராஜ்குமாரும் நான்காம் ஆண்டு படிக்கும் சிறுவர்கள். இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசாமல் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களைப் பார்த்த இவர்களது வகுப்பாசிரியர், இவர்களைச் சமாதானம் செய்ய பலவாறு முயற்சி செய்து தோற்றுப் போனது தான் மிச்சம். ஆசிரியர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்துப் பேசினார். இருவருமே ஒருவர் மற்றவரிடம் இன்னும் அன்பாகத்தான் இருந்தனர். ஆனால் அவர்களிடையே இருந்த நான் என்னும் இறுமாப்பு அவர்களை சேர விடாமல் தடுத்துக் கொண்டிருப்பதை அவர் கண்டுபிடித்தார். இருவருக்கும் ஒரு ஆலோசனை கொடுத்தார்.

அந்த ஆலோசனையின் படி இருவரும் அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் விழாவுக்காக காத்திருந்தனர். கிறிஸ்துமஸ் விழாவும் வந்தது, ஆனந்த ராஜ் காலையிலேயே எழுந்து ராஜ்குமாரின் வீட்டுக்கு விரைந்து சென்றான். வாசலிலேயே வரவேற்ற அவனது அம்மா "ராஜ்குமார் உன்னைத் தேடி உன் வீட்டுக்கு



சென்றுவிட்டானே!" என்று கூற தன் வீட்டுக்கு வேகமாக ஓடினான் ஆனந்த ராஜ். வழியில் தன் நண்பனைச் சந்தித்து தன் கையில் வைத்திருந்த பரிசுப் பொருளை அவனிடம் நீட்டினான், பதிலுக்கு ராஜ்குமாரும் தன் நண்பனுக்கு ஒரு பரிசை நீட்டினான். இந்த பரிசுப் பகிர்வு இருவரிடையே இருந்த இறுமாப்பை அகற்றியது. இருவரும் பரிசைப் பகிர்ந்து கொண்டு ஒருவர் ஒருவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர். மீண்டும் தங்கள் நட்பைப் புதுப்பித்துக் கொண்டனர். இது தான் கிறிஸ்துமஸ் பகிர்தல் கொண்டாட்டம். நம் கிறிஸ்துமஸ் பகிர்வு எல்லாவற்றிற்கும் மேலாக நம் உறவைப் பலப்படுத்துகின்றது. கடவுள் தன் உறவை நம்முடன் பலப்படுத்துகின்றார். அந்த உறவைப் பெற்றுக் கொண்ட நாம் நம் அயலாரோடு அந்த உறவைப் பலப்படுத்துகின்றோம். இதுவே இந்த விழாவின் முக்கியக் கருத்து.



இன்றும் கிறிஸ்து பிறப்பு விழாவின் சிறப்பான தயாரிப்பான கரோல் பாடல்கள் மற்றும் கிறிஸ்துமஸ் பரிசுப் பகிர்வுக் கொண்டாட்டம் இதையே கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித நிக்கோலாஸ் என்னும் ஆயரின் நினைவாக கிறிஸ்துமஸ் தாத்தா வருகின்றார். இந்தப் புனிதர், தான் வாழ்ந்த காலத்தில் ஏழைகளுக்கு உதவும் நிகழ்வாக இதை பயன்படுத்தினார். இதன் மூலம் அனைவரும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் அனைவரும் சமத்துவமாக வாழ உரிமை பெற்றவர்கள் என்ற கருத்தை அவர் தெரிவிக்கின்றார். அவரைத் தொடர்ந்து நாமும் இந்தப் பரிசுப் பகிர்வு அனைவரையும் சமமாகக் கருதும் அன்பு எண்ணத்தோடு செயற்படுத்துவதால் இன்னும் அது நம் மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நாம் பிறர் பால் கொண்ட அன்பை இந்த பரிசுகள் வழியாக வெளிப்படுத்துகின்றோம்.

கிறிஸ்து தன் இறைநிலையை விட்டுக் கொடுத்து மனிதனாகப் பிறந்து தன் இறைநிலையை நம்மோடு பகிர்ந்து கொண்டார். கிறிஸ்து தன்னிடமிருந்த உன்னதமான நிலையை நம்மோடு பகிர்ந்து கொண்டார். நாமும் பிறருக்காக நம்மிடம் உள்ள அனைத்தையும் பகிர்ந்து கொண்டு இந்த கிறிஸ்துமஸ் விழாவை மிகவும் அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடுவோம்.

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

# பங்குகளில் சிறப்பிக்கப்பட்ட மறைக்கல்வி வாரம்



புனித லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று



இறை இரக்கத் திருத்தலம் – அலஸ்தோட்டம்



புனித சூசையப்பர் ஆலயம் – நிலாவெளி



குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை



புனித சதா சகாய அன்னை ஆலயம் – அன்புவழிபுரம்



புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் – சாம்பல்தீவு

## புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி வாரம்

தேசிய மறைக்கல்வி வாரத்தினை முன்னிட்டு திருகோணமலை மறைக்கோட்டத்தின் புனித சதாசகாய அன்னை ஆலயம் அன்புவழிபுரத்தில் தேசிய மறைக்கல்வி வார சிறப்புத் திருப்பலி சிறப்பிக்கப்பட்டன இதன் அடிப்படையில்

16.09.2024 – "நம்பிக்கை நிறைந்த இறைவேண்டல் மூலம் ஆன்மீக வாழ்வை சுவைப்போம்" எனும் தலைப்பில் முன்பள்ளி மற்றும் தரம் 11 மாணவர்கள் சிறப்பித்தனர். இவர்கள் அன்றைய நாள் தலைப்பிற்கேற்ப ஒளிப்படக்காட்டியில் (Projector) காட்சிப்படுத்தியிருந்தனர்.

17.09.2024 – "ஒன்றுபட்டு ஒத்துழைத்து வாழக்கற்றுக்கொள்வோம்" எனும் தலைப்பின் கீழ் தரம் 1 மற்றும் தரம் 10 மாணவர்கள் தூய ஆவியின் கொடைகளை காட்ச்சிப்படுத்தி சிறப்பித்தனர்.

18.09.2024 – "இறையன்பை நம் வாழ்வில் உயிர்மூச்சாக்குவோம்" எனும் தலைப்பின் கீழ் தரம் 2 மற்றும் தரம் 9 மாணவர்கள் அன்றைய நாள் திருப்பலி வாசகத்தில் அன்பு தொடர்பாக கூறப்பட்ட விடயங்களை காட்சிப்படுத்தி மிகவும் சிறப்பாக சிறப்பித்தனர்.

19.09.2024 – "கிறிஸ்து இயேசுவிடமிருந்து பொங்கி எழும் அன்பில் நனைவோம்" எனும் தலைப்பில் அன்னை திரேசா போன்று ஆடையணிந்து அன்னையின் அன்பை வெளிக்காட்டும் விதமாக தரம் 3, தரம் 8 மாணவர்கள் சிறப்பித்தனர்.

20.09.2024 – "நம்பிக்கை நிறைந்த வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவின் சாட்சிகளாகுவோம்" எனும் தலைப்பில் பாவ வாழ்வில் வாழ்ந்தவர்கள் எவ்வாறு மனம்திருந்தி சாட்சிய வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதனை மிகவும் துல்லியமாக தரம் 4, தரம் 7 மாணவர்கள் காட்சிப்படுத்தியிருந்தனர்.

21.09.2024 – "திருமுழுக்கில் நாம் பெற்றுக் கொண்ட அழைத்தலுக்கேற்ப வாழ்வோம்" எனும் தலைப்பிற்கேற்ப திருமுழுக்கினால் கிடைக்கும் அருள்களை காட்சிப்படுத்தியிருந்தனர். தரம் 5, தரம் 6 மாணவர்கள் இவ்வாறு ஒவ்வொரு வகுப்பு மாணவர்களின் திருப்பலிகளும் மிகவும் சிறப்பாகவும் அர்த்தமுள்ளதாகவும் சிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

தொடர்ந்து 29.09.2024 அன்று காலை மறைக்கல்வி வார சிறப்புத் திருப்பலியானது காலை கொடியேற்றத்துடன் இனிதே ஆரம்பமாகியது. இத்திருப்பலியானது மறைக்கல்வி மாணவர்களினாலும் மறையாசிரியர்களினாலும் விசேடமாக சிறப்பிக்கப்பட்டதுடன் மறையாசிரியர்களின் வாக்குத்தத்தத்துடனும் பங்குத்தந்தையின் சிறப்பு ஆசீருடனும் இனிதே நிறைவுற்றது. திருப்பலியின் பின்பு மறைக்கல்வி வாரத்தினை சிறப்பித்த ஒவ்வொரு மாணவர்களுக்குமான பரிசில்கள் பங்குத்தந்தையால் வழங்கி வைக்கப்பட்டதுடன் மறைக்கல்வி மாணவர்களின் நிகழ்ச்சிகளும் பெற்றோர் புடைசூழ இடம்பெற்றது. இதன் போது தரம் 10 மற்றும் தரம் 11 மறைக்கல்வி ஆசிரியர்கள் இணைந்து 10 கன்னியர் உவமையினை நடைமுறை வாழ்வில் விழிப்புணர்வுடன் கூடிய கருத்தினை முன்வைத்து நடித்துக்காட்டினர். இதனையடுத்து முன்பள்ளி தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆக்கங்கள் பெற்றோர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டது. இறுதியாக தேசிய மறைக்கல்வி வாரத்தினை நிறைவு செய்யும் முகமாக கொடி இறக்கப்பட்டு, இறுதி செபத்துடன் அன்றைய நாள் நிகழ்வானது இனிதே நிறைவு பெற்றது.

**தகவல்:– மறையாசிரியர்கள் (அன்புவழிபுரம்)**

# தடங்கலுக்கு மகிழ்கின்றோம்

**இளையோர் பக்கம் – 01**

# நில் – நிதானி – முன்னேறு

**அருட்பணி - யூட் ஜோன்சன்**

இன்றைய இளையோரே நாளைய தலைவர்கள்.நாளைய சமூகத்தின் வழிகாட்டிகள். உலக சனத்தொகையில் இளையயோரின் தொகையில் ஆசியக் கண்டமே புள்ளி விபரங்களில் அதிகமான எண்ணிக்கையை காட்டுகின்றது. வயோதிபத்தில் வரும் சாவை விட, விபத்தில் வரும் இளையோரின் சாவே பலரையும் அதிர்ச்சிலும் சோகத்திலும் ஆழ்த்துகின்றது.

ஒருபுறம் அறிவியல் வளர்ச்சி, அசுர வேகத்தை விஞ்ஞான கண்டுபிடிப்புகளிலும், கணணி இயந்திர ஆதிக்கத்தின் அபார தாக்கமும், மனித நுண்ணறிவையே வெல்லும் அளவிற்கும், செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கின்றது. மறுபுறம் மனித மாண்பும், மதிப்பீடுகளும் தலைகீழ் திசையில் பயணிக்கும், பயங்கரமானதும் உண்மையானதுமான நிலைபாட்டைக் காண்கின்றோம். இவ்வாறு சமூக, பொருளாதார, அரசியல், சமய காரணிகளிலும் இளையோரின் பங்களிப்பு மாபெரும் சக்தியாக இருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

அதேவேளை, வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள முடியாது, தம் உயிரை தற்கொலைகளில் மாய்த்துக்கொள்ளும் இளையோர் ஒருபக்கம். எதையும் மாற்றும் உத்வேகம் கொண்ட சக்தியை, போதை பொருட்களுக்கும், சட்ட ஒழுங்குகளை மீறும் வன்முறை செயல்களுக்கும், அடிமையாகி தன்னையும், தான் சார்ந்த சமூகத்தையும், அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் இளையோரையும் இக்காலத்தில் எதிர்மறைக் காரணிகளாக காண்கின்றோம்.

இச் சிக்கல் நிறைந்த சூழலில் எவ்வாறு புரிந்துகொள்வது என்னும் கடினமான பணியை நோக்காகக் கொண்டு 'தடங்களுக்கு மகிழ்கின்றோம்' என்னும் பயணத்தை ஆரம்பிக்கின்றோம். சரியான மனப்பாங்கை (Attitude) வளர்ப்பதன் வழியாகவே உறுதியான மாற்றத்தை ஏற்படுத்தமுடியும். தன்னம்பிக்கை உள்ள ஒவ்வொரு மனித தேடலும், இறை நம்பிக்கையின் வெளிப்பாடே ஆகும். தன்னம்பிக்கையை வளர்க்காத எந்த போதனையும், இறைநம்பிக்கைக்கு அடித்தளமாக அமையாது. இயேசுவின் குணமளிக்கும் தருணங்கள் ஒவ்வொன்றும் தன்னம்பிக்கையின் மந்திரச் சாவியான “உனது நம்பிக்கை உன்னை மீட்டது” என அமைவதே திருவிவிலியத்தின் ஆதாரமாகும்.

### நில்

**நிகழ்வு: 01**

ஓர் ஊரில் அதிகாலைவேளையில் முயலொன்றைக் கண்ட நாயொன்று அதனை துரத்தத் தொடங்கியது. நாயின் குரைப்பை கேட்ட ஊரில் இருந்த வேறுபல நாய்களும் துரத்திய நாயை பின்பற்றி ஓடத் தொடங்கியது. இவ்வாறு நாயின் குரைப்பை கேட்டு கூட்டம் சேர்ந்த பல நாய்கள் ஒன்றன்பின் ஒன்றாக களைப்பினால் பின்வாங்கி, நாக்கை தொங்கவிட்டுக்கொண்டு நின்றுவிட்டன. முயலைக் கண்டு துரத்திய நாய் மட்டும் இறுதியில் தன் வயிற்றுப் பசிக்கு உணவாக முயலை பிடித்து உண்டது.

இது ஓர் அவசரமான உலகம். இயக்கநிலையில் நாம் தொடர்ந்து நகர்ந்துகொண்டே இருக்கவேண்டியுள்ளது. இல்லையேல் நம்மை மிதித்துக்கொண்டு முன்னேறுவதில் மற்றவர் முனைப்புடன் இருக்கின்றார்கள். எதற்கும் ஓட வேண்டும் என்பது மனித வாழ்வின் நியதியாகிவிட்டது. உயிர் ஒன்று உருவாக பல்லாயிரம் எண்ணிக்கையில் ஆணின் ஒரு விந்தணுதான் பெண்ணின் முட்டையை அடைந்து உயிர் கருவாகின்றது. போட்டி நிறைந்த உலகில் உயிருக்காக ஓட ஆரம்பித்து கல்லறை சென்றடையும் வரை தொடர்கின்றது.





எம் பயணங்களில் இரயில் கடவைகளில் தடை கதவிற்கு பின் நின்று, பொறுமையிழந்து, அங்குள்ள பணியாளனை திட்டித் தீர்த்து, ஒரு வில்லைப்போல கருதி முடிந்தால் கதவுளின் இடைவெளியால் வீதி ஒழுங்குகளை மீறியாவது கடந்த சந்தர்ப்பங்கள் இதை வாசிக்கும் உங்களுக்கு இருந்திருக்க வாய்ப்புகள் உண்டு. அப்படியும் உயிர்கள் காவுகொண்ட சந்தர்ப்பங்களை கண்ட சாட்சிகளும் உள்ளனர். ஒருவேளை தன் பணியை செய்ய தாமதித்தால் எவ்வளவு பெரிய ஆபத்து நிகழும் என்பதை நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கின்றது. ஒவ்வொரு முறையும் இந்த தொழிலாளி தன் கடமையை சரியாக செய்யும்போது எத்தனை உயிர்கள் காக்கப்படுகின்றது என்பது ஒரு நல்ல செய்தியல்லவா.



சிலசயங்களில் தடங்கல்களுக்கு மகிழ்ச்சியடைவதில் தவறென்ன? வாழ்க்கையில் சந்திக்கின்ற தடங்கலுக்கெல்லாம் வருந்தி, அழுது, கண்ணீர்சிந்தி உடைந்துபோகின்ற சூழ்நிலைகளில் தடங்கல் தடங்களாகவும் மாறலாம் என்பது ஒரு புதிய கோணம்.

### நிதானி (அவதானி)

**நிகழ்வு: 02**

கடவுள் ஒருநாள் தம் சீடர்களுடன் மனிதன் வாழும் உலகில் உலா வந்தார். ஓர் கால்நடைப் பண்ணையில் பல மாடுகளை கொல்வதற்காக ஒரு வண்டியில் சிலர் ஏற்றுவதை கண்டார். மாடுகள் அமைதியாக அவர்களுக்கு அடிபணிந்து செயற்படுவதைக் கண்ட சீடர்கள் வியப்பாக கடவுளை பார்த்தார்கள். அவரும் அமைதியாக கடந்து சென்றார். இன்னுமோர் இடத்தில் மரங்களை வெட்டி ஒரு வண்டியில் பல மனிதர்கள் ஏற்றுவதைக் கண்டார்கள். அங்கும் மரங்கள் அமைதியாக இருந்ததைக் கண்ட சீடர்கள் வியந்து கொண்டனர். அடுத்து ஒரு கிராமத்தை கடந்து செல்லும்போது கடவுளை இனங்கண்ட மக்கள் ஓடிவந்து தம் தேவைகளைக் கூறி, அடுத்தவரைக் குறைகூறி, வரங்களை கேட்கத்தொடங்கினர். சீடர்கள் இதனை அவதானித்து கடவுளை வினவினர். கடவுள் பதிலாக “இதுதான் மனிதனின் ஆறாம் அறிவு” என்றார்

இறைவனின் படைப்பில் மனிதன் மட்டுமே தன் செய்கைகளை பகுத்துணர்ந்து செயற்பட ஆற்றலுடையவன். இதனை ஆய்வாளர்கள் ஆறாம் அறிவு என்று அறுதியிட்டு கூறுகின்றனர். மனித அனுபவத்தில் பறவைகள் கூடுகட்டியே வாழ்கின்றன. வீடுகட்டியதாக வரலாறு இல்லை. காகம் “கா…கா…” என்றே எந்த கண்டத்திலும், நாட்டிலும் கத்துகின்றது. மரங்கள் அதன் பலனை ஒரே வகையாகவே வெளிக்கொணருகின்றன. இதனை (instinct) “உள்ளுணர்வு” அல்லது “இயல்புணர்ச்சி” அல்லது “சுபாவம்” என வரையறை செய்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வகையில், ஒரே மாதிரியாக அமையும் நடத்தையை இது குறிப்பிடுகின்றது.

ஆனால் மனித நடத்தைகளை ஆய்வு செய்யும்போது மனிதன் பன்முக சாயலைக்கொண்டு, தனித்துவத்தில் வேறுபட்டு (individuality), தனித்த அல்லது தனித்திறன் (unique) கொண்டவனாக இருக்கின்றான். படைப்பாற்றல் (creativity) நிறைந்தவனாக ஏனைய படைப்புகளில் இருந்து வேறுபடுகின்றான். எனவே சுயமாக சிந்திக்கமுடிந்த (Self-reflection) மனிதன், சுயஆய்வின் (self-evaluation) ஊடாக தன் ஒவ்வொரு தடங்கலையும் வரலாற்றில் பதித்ததன் விளைவே அறிவியல் வளர்ச்சி. மனிதனால் மட்டுமே தன் செயலுக்கு பொறுப்புக்கூற முடிகின்றது. பொறுப்பு கூற தவறும்போதெல்லாம் குழப்பமும் தடுமாற்றமும் ஏற்படுகின்றது (ஆதாம், ஏவாள் முதல் பாவம்)

தொடரும்...

## புனிதர்களின் பாதையில்....



“நற்கருணையின் முன்னால் செலவிடும் நேரத்தைப் பொன்னான நேரமாகக் கருதவேண்டும்” எனக்கூறி அவ்வாறே வாழ்ந்தவர். இறைமக்களுக்கு விண்ணகம் செல்ல பாதை காட்டியவர். நான் குருவானால் கடவுளுக்காக ஏராளமான ஆன்மாக்களை வென்றெடுப்பேன் எனக் கூறியவர். இவர் பிரான்ஸ் நாட்டில் இலயன்ஸ் நகரில் டார்டிலி என்ற கிராமத்தில் 1786ஆம் ஆண்டு மே 8ஆம் நாள் பிறந்தார். தனது 13ஆம் வயதில் நற்கருணை பெற்றுக்கொண்டார். குருவாகப் பணிசெய்ய விரும்பிய இவர் தனது இறையியல் படிப்பை முடித்து 1815ஆம் ஆண்டு குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

ஜோன் மரிய வியான்னி ஆர்ஸ் என்ற சிற்றூரின் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். இவர் ஆர்ஸ் கிராமம் செல்ல வழி தெரியாமல் திகைத்தபோது ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் வழிகாட்டினான். தனக்கு வழிகாட்டிய சிறுவனிடம், ஜோன் மரிய வியான்னி “நீ எனக்கு ஆர்சுக்கு வழிகாட்டினாய் நான் உனக்கு விண்ணகத்திற்கு வழிகாட்டுவேன்” என்றார். வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்தார். காலை முதல் மாலை வரை ஆலயத்தில் செபித்தார். நோயாளிகளையும் அவர்களது இல்லங்களையும் தவறாமல் சந்தித்தார். ஆதரவற்றோரைப் பராமரிக்க இறைபராமரிப்பு இல்லம் தொடங்கி கவனித்தார். குழந்தைகளுக்கு கல்வி புகட்டினார். தனது மறையுரையில் 'விண்ணகம்' என்ற சொல்லை அதிகமாக பயன்படுத்தியவர் இவரே.

பிறரை புனிதப்படுத்த தன்னை புனிதப்படுத்தினார். மரிய வியான்னியின் செப, தவ முயற்சியின் பலனாக ஆர்ஸ் சிற்றூர் மறைமாவட்டத்திலேயே ஒரு முன்மாதிரியான பங்குத்தளமாக 1835இல் அறிவிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் மட்டுமே உறங்கினார். கரடு முரடான படுக்கையில் படுத்து உறங்கினார். உணவிற்காக ஒரு சில வேகவைத்த உருளைக் கிழங்குகளை உண்டார். அலகையின் துன்புறுத்தல்களுக்கு ஆளானார். இறையன்பராக, ஏழ்மையின் இலக்கணமாக வாழ்ந்த ஜோன் மரிய வியான்னி 1859ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## பங்குத்தந்தையர்களின் பாதுகாவலரான புனித ஜோன் மரிய வியான்னி

இறைஞானத்தின் எளிய வடிவமாக விளங்கிய ஜோன் மரிய வியான்னிக்கு 1905ஆம் ஆண்டு திருத்தந்தை 10ஆம் பயஸ் அருளாளர் பட்டம் வழங்கி இவரைப் 'பங்குத்தந்தையரின் முன்மாதிரி' என்றும் அறிக்கையிட்டார். 1925இல் திருத்தந்தை 11ஆம் பயஸ் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார். பங்குத்தந்தையரின் பாதுகாவலரான புனித ஜோன் மரிய வியான்னியின் அழியாத உடல் இன்று வரை பிரான்ஸ் ஆர்ஸ் தேவாலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இவரது இறப்பின் 150வது ஆண்டு நினைவை சிறப்பிக்கும் விதத்தில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் யூன் 2009 – யூன் 2010 காலத்தை கத்தோலிக்க திருஅவையில் குருக்களின் ஆண்டாக அறிவித்தார். அச்சமயம் வத்திக்கான் இவரின் உருவம் கொண்ட தபால் தலையை வெளியிட்டு சிறப்பித்தது.

# அன்பிய வாழ்வே கிறிஸ்தவ நிறைவாழ்வு

செ. செல்வராஜ் (பெரிய உப்போடை, மட்டக்களப்பு)

திருஅவை கிறிஸ்துவின் மறையுடல், ஏனெனில் திருஅவை என்பது தலத்திருஅவையில் உயிர் பெற்று வழிபாட்டில் உண்மையாகி நற்கருணைக் கொண்டாட்டத்தில் (திருப்பலியில்) உணரக்கூடிய உண்மையாகிறது. இத்திருஅவை தனது உயிரை இறைவார்த்தையிலிருந்தும் நற்கருணையாகிய இயேசுவின் திரு உடலிலிருந்தும் பெறுவதால் திருஅவையை கிறிஸ்துவின் மறையுடல் என்று அழைப்பதே சரியாகும்.

இயேசுவின் போதனையான இறைவார்த்தையும் தூய ஆவியானவரின் வல்லமையும் இணைந்திருந்தால் மாத்திரமே ஓர் அன்புச்சமூகம் (அன்பியம்) உருவாக முடியும் என்பதற்கு தொடக்ககால திருஅவையே சிறந்த சான்றாகும். இயேசுவின் இறையரசுக் கனவு அன்பியமாக உயிர்பெற்று உருவாகுவதற்கு தூய ஆவியானவரின் தூண்டுதலே காரணம் எனக் கூறலாம். உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில் அவருடைய வார்த்தையை ஏற்று தூய ஆவியானவரின் துணையுடன் வாழமுற்படும் சமூகமே அன்பியச் சமூகமாக இருக்க முடியும்.

தமதிருத்துவத்தின் இறைவன் ஒரு குடும்பமாக அன்புச் சமூகமாக செயற்படுவதைப் பார்க்கின்றோம். தமதிருத்துவத்தின் மூன்று ஆட்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை அன்புப்பரிமாற்றம், ஒன்றித்து திட்டமிட்டு செயற்படுதல், சிந்தித்தல், மகத்துவத்தில் சமத்துவம் ஆகிய பண்புகளே அடித்தளத் திருஅவைச் சமூகங்களின் பண்பாகும். தமத்திருத்துவத்தில் காணப்படும் அனைத்து நற்பண்புகளையும் நமது அன்பியங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதே இறைவனுடைய விருப்பமாகும். எனவே தான் இயேசு தமது செபத்தில் தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்; என்று ஐந்து தடவைகள் செபிக்கின்றார். “என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் நீங்கள் என்மக்களாய் இருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்.” என்னும் இறைவார்த்தைக்கிணங்க அன்பியம் என்னும் இந்த இறைச்சமூகம் இறைவனுடைய வார்த்தைகள் வழியாக, ஒளியாக, வாழ்வாகக் கொண்டு யாரையும் ஏமாற்றாத யாருக்கும் தீங்கு செய்யாமல், எல்லோரையும் அன்பு செய்யும் சமூகமாகவும், ஏழைகள், அநாதைகள், விதவைகள், வசதி வாய்ப்பற்றவர்கள், தேவையில் உழல்பவர்கள் என அனைவர் மேலும் இரக்கம் கொண்டவர்களாக அவர்களுக்கு தேவையான உதவிகள் பல செய்து இயேசுவின் அன்பை அவர்களுடன் பகிர்ந்து வாழும் சமூகமாகவும், அடிமைத்தளைகளை அறுத்தெறிந்து புதுவாழ்வளிக்கும் சமூகமாகவும் அன்பியங்கள் இருக்க வேண்டும்.

அன்பியங்கள் தூய ஆவியானவரின் ஏவுதலால் இன்றைய சூழ்நிலைகளுக்கேற்ப இன்றைய திருஅவைக்கு இறைவன் வழங்கியுள்ள புதிய வாழ்க்கை முறையாகும். இந்த அன்பியங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலையில் இயங்குவதால் அவை உண்மையான நற்செய்தி ஊடகங்களாகவும் கிறிஸ்தவ வாழ்க்கை முறையாகவும் இருப்பதனால் இப்படிப்பட்ட அடித்தள அன்பியச் சமூகங்களைக் கட்டியெழுப்புவதே மூவாயிரமாவது அனைத்து மறைமாவட்டங்களின் அடிப்படைப் பணி என்று திருத்தந்தை கூறியுள்ளார். அன்பியம் முக்கிய பணி மட்டுமல்ல முதற் பணி என்பதை உணரவேண்டும்.

உண்மையாகக் கூறவேண்டுமென்றால், இன்றைய கத்தோலிக்க திருஅவையின் அமைப்புக்களில் பொது நிலையினர் எல்லா விதங்களிலும், ஈடுபட்டு பயிற்சிபெற, பயனுள்ள விளைநிலம். அன்பியம் தவிர சிறந்த அமைப்பு வேறு இருக்கமுடியாது. என்பதே என் வாதம் என்று கூறுகிறார் அருட்பணி அருள்ராஜ். இவர் அன்பியம் திருஅவையின் புதிய வாழ்க்கை முறை என்ற தலைப்பில் முதுகலைப்பட்டப் படிப்பை அமெரிக்காவில் ஆய்வு செய்தவர்.

அர்த்தமற்ற சமயச் சடங்குகளிலிருந்து விடுபட்டு சாரமுள்ள, கனி கொடுக்கின்ற கிறிஸ்தவ வாழ்வு வாழ இன்று நமக்குத் தென்படும் ஒரே வழி அன்பியங்கள். போலியான பொய்யான வழிகளிலிருந்து தமது மந்தையைக் காப்பாற்றி ஈடுபாடுமிக்க இறைவனுக்கு உகந்த ஓர் இறைமக்கள் இயக்கத்தைக் கட்டி எழுப்ப கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் இன்றைய கட்டாயத்தேவை அன்பியங்களே. பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழும் மக்கள் ஞாயிறு திருப்பலியுடன் திருப்தி அடைந்து பழகிப்போனவர்கள் அன்பியங்களில் ஆர்வம் காட்ட ஆரம்பத்தில் தயங்கினாலும் அன்பியங்களின் வளர்ச்சி கண்டு இணைந்து செயற்படுவர் என்பது உறுதி. பக்திச்சபைகள் போதும் என எண்ணி அன்பியங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களும் அன்பியம் பற்றிய அறிவும், புரிதலும், அதன் தேவைகள், அதன் முக்கியத்துவம், அதன் தன்மைகள் பற்றியும் அறியும்போது நிச்சயமாக அன்பியங்களில் இணைந்து இறை விருப்பத்தை நிறைவேற்ற முன்வருவார்கள் என்பது உறுதியாகும். ஏனெனில் அன்பியங்கள் இல்லாத திருஅவை எதிர்காலம் இல்லாத திருஅவை என்பது இன்று உறுதியாகியுள்ளது.

தொடரும்...

## திருத்தூதர் பணிகள்
## 09 – 12 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=

**கேள்வி பதில்**

1. சவுலே சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்? என யாரால் கூறப்பட்டது?

விடை:..........

2. ஐனேயா எத்தனை ஆண்டுகள் முடக்குவாதத்தினால் படுக்கையில் கிடந்தார்?

விடை:..........

3. "கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன்" என கூறியவர் யார்?

விடை:..........

4. ஸ்தேவானை முன்னிட்டு உண்டான துன்புறுத்தலால் மக்கள் எங்கெல்லாம் சிதறிப்போயினர்?

விடை:..........

5. யோவானின் சகோதரனான யாக்கோப்பை வாளால் கொன்றது யார்?

விடை:..........

**சரி, பிழை எழுதுக.**

6. யோப்பா எனும் நகரில் தபித்தா என்ற பெயருடைய பெண் சீடர் இருந்தார். ( )

7. ஏரோது தீர், சீதோன் மக்கள் மீது கடுஞ்சினம் கொண்டிருந்தான். ( )

8. யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். ( )

9. ஏரோது பேதுருவை சிறையில் இருந்து தப்புவித்தார். ( )

10. தூய ஆவியால் ஏவப்பட்டவராய் பேதுரு உலகமெங்கும் கொடிய பஞ்சம் ஏற்படப் போகிறது என முனுமுனுத்தார். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. "வேண்டவே வேண்டாம் ஆண்டவரே, __________ தூய்மையற்றதுமான எதையும் நான் ஒரு போதும்__________ "

12. உனக்குப் __________ விட்டதா? என்று கேட்டார்கள் ஆனால் அவர் அது __________ என்று வலியுறுத்திக் கூறினார்.

13. ஒரு __________ பிற குலத்தவரிடம் செல்வதும் அவர்களோடு உறவாடுவதும் __________ என்பதை நீங்கள் அறிவீர்கள்.

14. வாழ்வுக்கு வழியான __________ பிற இனத்தவருக்கும் __________ கொடுத்தார் என்று கூறி அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

15. உமது வேண்டல்களும் __________ கடவுள் திருமுன் __________

பெயர் :..........

முகவரி :..........

தரம் :..........

பங்கு :..........

முடிவுத்திகதி 2025.02.28

## திருவிவிலிய புதிர் போட்டி – 62
## எசாயா 35 – 39 அதிகாரங்கள்

1. காலூனமுற்றோர் இதைப் போல் துள்ளிக் குதிப்பர். வாய் பேசாதோர் இப்படிப் பாடுவர். பாலைநிலத்தில் இது பீறிட்டு எழும்.

விடை:..........

2. ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோர் திரும்பி வருவர். மகிழ்ந்து பாடிக் கொண்டே இங்கு வருவர்.

விடை:..........

3. அசீரிய மன்னன் இங்கிருந்து இரப்சாக்கே என்பவனைப் பெரும் படையுடன் இங்கே இவரிடம் அனுப்பி வைத்தான்.

விடை:..........

4. ஆடைகளைக் கிழித்துக் கொண்டு எசேக்கியாவிடம் வந்து இரப்சாக்கே சொல்லியவற்றை கூறியவர்கள் யாவர்?

விடை:..........

5. எசேக்கியா அரசர் அதைக் கேட்டவுடன் தம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு சாக்கு உடையால் தம்மை மூடிக்கொண்டு எங்கே சென்றார்?

விடை:..........

6. உன் மூக்கில் என் இதையும், உன் வாயில் என் இதையும் மாட்டுவேன்.

விடை:..........

7. "நீர் உம் வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும் ஏனெனில் நீர் சாகப்போகிறீர். பிழைக்கமாட்டீர்" இவ்வார்த்தை யார் யாருக்குக் கூறியது.

விடை:..........

8. என் உறைவிடம் இதைப்போல் பெயர்க்கப்பட்டு என்னை விட்டு அகற்றப்படுகின்றது.

விடை:..........

9. இவரின் இல்லத்தில் எம் இதனை வாழ்நாளெல்லாம் இதனை மீட்டிப் பாடுவோம்.

விடை:..........

10. "நீர் கூறிய ஆண்டவரின் வாக்கு நல்லதே" என்று யார் யாருக்கு கூறியது?

விடை:..........

11. இது போலும் இதைப்போலும் கூக்குரலிடுகிறேன். இதைப் போல் விம்புகிறேன். மேல் நோக்கிப் பார்த்து என் கண்கள் சோர்வடைந்தன.

விடை:..........

12. இந்த நிலமும் இந்த வெளியும் அகமகிழும் இந்த நிலம் அக்களிப்படைந்து இது போல் பூத்துக் குலுங்கும்.

விடை:..........

13. எசேக்கியா நலமடைய எசாயா என்ன பதில் கூறியிருந்தார்?

விடை:..........

14. பாபிலோனின் தூதரிடம் எசேக்கியா எவற்றைக் காட்டினான்?

விடை:..........

15. ஆண்டவரின் தூதர் புறப்பட்டுச் சென்று அசீரியரின் பாசறையிலிருந்து எத்தனை பேரைச் சாகடித்தார்?

விடை:..........

பெயர் :..........


முகவரி :..........


தரம் :..........

பங்கு :..........

முடிவுத்திகதி 2025.02.28

# சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
# படங்களுக்கு நிறம் தீட்டுதல்





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 700/- 2 ஆம் பரிசு - 500/- 3 ஆம் பரிசு - 300/-

பெயர் :......................................................

முகவரி :......................................................

தரம் :......................................................

பங்கு :......................................................

*முடிவுத்திகதி 2025.02.28*

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 47

### நீதிமொழிகள் அதிகாரம் 19 - 21 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | | | | | | | | | அ |
| | | | இ | | | மா | | ஞா | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | நீ | | | இ | க | | | | |
| | | நி | பி | | | | நீ | | |
| | | | | | | | | | தி |

1. ந ----- கொ ----- யா ----- ரு ----- கு
2. நன் ----- தி ----- பை ----- ----- ரும்
3. ஞா ----- மு ----- ----- வ ----- ய்
4. இ ----- ழ் ----- ரு ----- கு
5. நீ ----- த் ----- ----- ழ் ----- ர்
6. பி ----- ----- மை
7. அ ----- க் ----- ம் ----- டை
8. மா ----- ற்ற ----- ரா -----
9. க ----- வி ----- ----- திரு
10. இ ----- றி ----- மு ----- ர்
11. நி ----- த் ----- ----- ற் ----- ம்
12. தி ----- க்க ----- ட ளை ----- ளை
13. நீ ---- மி ---- இ ---- வ ----

பெயர் :......................................................

முகவரி :......................................................

பங்கு :......................................................

*முடிவுத்திகதி 2025.02.28*

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ருபா
வி. மதி பியோனா
இல. 88, புளியங்குளம்
திருகோணமலை
இறை இரக்கத் திருத்தலம்.

2 ஆம் பரிசு 500/= ருபா
N. அஷ்வந்த்
கோபாலபுரம், நிலாவெளி
புனித சூசையப்பர் ஆலயம்





3 ஆம் பரிசு 300/= ருபா
மி. ஏஞ்சல்
இல. 75, ஜின்னா நகர்
குவாடலூப்பே அன்னை திருத்தலம்

## திருத்தூதர் பணிகள் அதிகாரங்கள் 01 ~ 04

1 ஆம் பரிசு 700/= ருபா
யோசப் மோட்சமேரி
சகாயபுரம், ஆலய வீதி
மூதூர் – 02
புனித சதாசகாய அன்னை ஆலயம்

2 ஆம் பரிசு 500/= ருபா
ம. தக்ஷிய
இல. 27, மைக்கல்லேன்,
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்





3 ஆம் பரிசு 300/= ருபா
யோ. டிவேஞ்சன்
இல. 676, அன்புவழிபுரம்
புனித சதாசகாய அன்னை ஆலயம்

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி ~ 60
## எசாயா 25 ~ 29 அதிகாரங்கள்

1 ஆம் பரிசு 700/= ருபா
ச. மெடோனா குயின்
இல.12, வேளாங்கண்ணி வீதி,
பாலையூற்று, திருகோணமலை
புனித லூர்து அன்னை திருத்தலம்



2 ஆம் பரிசு 500/= ருபா
S. நிவேதிகா
மாங்காயூற்று, கன்னியா
கிறிஸ்து அரசர் ஆலயம்



3 ஆம் பரிசு 300/= ருபா
R. கேஸ்மியா
3ஆம் வட்டாரம், நிலாவெளி
புனித சூசையப்பர் ஆலயம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

மறைக்கல்வி நடுநிலையத்தின் ஏற்பாட்டில் ஞாயிறு மறைப்பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான நாடகப் போட்டியானது 23.11.2024 அன்று தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரிவுகளுக்கும் 30.11.2024 சிங்களப் பிரிவிற்கும் நடாத்தப்பட்டது.

3,4,5 தமிழ்ப் பிரிவு பேச்சுப் போட்டியில் U. பிரனவி முதல் இடத்தையும் C.K. கயாசினா இரண்டாம் இடத்தையும், N. நிலாஷா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

6,7,8 தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரிவு பேச்சுப் போட்டியில் T. அலன் அட்ரியன் முதல் இடத்தையும், J.M. டெனோரியஸ் இரண்டாம் இடத்தையும், A. ஹர்னிஷா P. பவிகேஷா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆங்கிலப் பிரிவில் J. ஷான் வெட்சன் முதல் இடத்தை பெற்றுக் கொண்டார்.

9,10,11 தமிழ்ப் பிரிவு பேச்சுப் போட்டியில் R. ஆன் இவானா முதல் இடத்தையும், M. நிஷேலி இரண்டாம் இடத்தையும், S. சம்கா ஹாணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

3,4,5 சிங்களப் பிரிவு பேச்சுப் போட்டியில் லவின்டி ஆதித்யா முதல் இடத்தையும், ஜினுலி யசன்சா இரண்டாம் இடத்தையும், விஷ்மி நேத்ரா மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

6,7,8 சிங்களப் பிரிவு பேச்சுப் போட்டியில் மிரியம் பெர்னாடெத், நெதுஜா மின்ஹாஸ் முதல் இடத்தையும், தேவ்துனி பிரசன்சா இரண்டாம் இடத்தையும், ஹிமான்ஷி நெஹன்சா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

9,10,11 சிங்களப் பிரிவு பேச்சுப் போட்டியில் பிமாஷா சித்துமி முதல் இடத்தையும், பிரவீன் ஹசரேல் இரண்டாம் இடத்தையும், நெத்துமி ஷமதக மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



நாடகப் போட்டியில் புனித லூர்து அன்னை திருத்தலம் (பாலையூற்று) முதல் இடத்தையும், புனித சூசையப்பர் ஆலயம் (நிலாவெளி) இரண்டாம் இடத்தையும், திருஇருதய ஆண்டவர் ஆலயம் (இருதயபுரம்) மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். விசேட விருதுகளாக சிறந்த இயக்குனர்- திருஇருதய ஆண்டவர் ஆலயம் திருமதி. உமாக்ஷன், சிறந்த எழுத்தாளர் - திருஇருதய ஆண்டவர் ஆலயம் திருமதி. நரீஸ்டா, சிறந்த நடிகை - புனித லூர்து அன்னை திருத்தலம் செல்வி. ஜெ. குளோரியா பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சிங்களப் பிரிவு நாடகப் போட்டியில் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் (ஆண்டாங்குளம்) முதல் இடத்தையும், புனித செபமாலை அன்னை ஆலயம் (குச்சவெளி) இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். விசேட விருதுகளாக சிறந்த இயக்குனர்- புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம் திருமதி. ஹசி, சிறந்த எழுத்தாளர் - புனித செபமாலை அன்னை ஆலயம் திருமதி. துலஞ்சி மதுவந்தி, சிறந்த நடிகை - புனித செபமாலை அன்னை ஆலயம் திருமதி. சந்திரிகா மாணல் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் மறையாசிரியர்களுக்கான ஒளிவிழா 07.12.2024 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் இயக்குனர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும், கௌரவ விருந்தினராக அருட்பணி பிரான்சிஸ் றொஹான் பெர்ணான்டோ அடிகளாரும், சிறப்பு விருந்தினராக செல்வி. பிரபோதா சில்வா அவர்களும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



குழந்தை இயேசு ஆலயம் – உவர்மலை



புனித லூர்து அன்னை திருத்தலம் – பாலையூற்று



புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் – ஆண்டாங்குளம்

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியாக 2024 ஆம் ஆண்டிற்கான கரோல் பாடல் போட்டியானது நவம்பர் மாதம் 24, 25ஆம் திகதிகளில் தமிழ் மற்றும் சிங்களப் பிரிவுகளாக நடைபெற்றது. இப்போட்டியில் தமிழ்ப் பிரிவில் திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த உவர்மலை குழந்தை இயேசு ஆலயம் முதல் இடத்தையும், பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. சிங்களப் பிரிவில் ஆண்டாங்குளம் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டது. இவர்களுக்கு திருமலைத்தீபம் பத்திரிகை சார்பாக வாழ்த்துக்கள்.